# மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 5

எண்: 53/2021 நாள்: 09.04.2021

**சுற்றறிக்கை**

**பொருள்:** மாணவர்கள் ஏப்ரல் 2021 தேர்வுக் கட்டணம் செலுத்துவது - குறித்து.

ஏப்ரல் 2021 பருவத்தேர்வுகளுக்கானத் தேர்வுக் கட்டணத்தை மாணவர்கள் 19.04.2021 மாலை 5.00 மணிக்குள் இணையவழியில் செலுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கு மாணவர்கள் www.rsgccoe.com என்ற வலைத்தளத்தில் உள்ள 'Student Login' -ல் தம் பதிவெண் மற்றும் பிறந்த நாளை (Hyphens -ம் சேர்த்து) உள்ளீடு செய்து தம் பக்கத்திற்குள் நுழைய வேண்டும். அப்பக்கத்திலுள்ள 'Applications' என்னும் வாயில் வழியாகச் சென்றால், அவர் செலுத்தவேண்டியத் தொகையினைத் தெரிந்து கொள்ளலாம். அத்தொகை அவரின் வங்கிக் கணக்கிலோ / அவரின் குடும்ப உறுப்பினரின் வங்கிக் கணக்கிலோ இருப்பதனை உறுதிசெய்து கொண்டு 'Make Payment' -ஐத் தெரிவு செய்யவும். அதில் Email, Address, City, Pin code, Phone number ஆகியவற்றைப் பூர்த்தி செய்து Submit தந்தால் தொகைச் செலுத்துகைப் பக்கத்திற்குச் செல்லும். அங்குள்ள Credit Card, Debit Card, Net Banking, Paytm, Wallet, UPI ஆகியனவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்யவும். அதிலும் குறிப்பாக ஏதேனும் ஒரு UPI (BHIM / Paytm / Google Pay / Amazon Pay /Whats app / Phone pe) வழியாகத் தேர்வுக் கட்டணம் செலுத்துவது மிகமிக எளிது.

எவ்வழியாகத் தேர்வுக் கட்டணம் செலுத்தினாலும், ஒரு ரூபாய்க்கூட கூடுதல் (commission) கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாது.

மாணவர்கள் தொகை செலுத்தியதற்கான Invoice-ஐ மாணவர்களின் Email-லேயே பாதுகாப்பாக வைத்திருக்கவும். கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்கள் வீட்டிலிருந்துத் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏதுவாக இணையவழிச் செலுத்துகையைப் பயன்படுத்துமாறுக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்கள் Internet centres / இடைத்தரகர்களின் உதவியை நாடுவதைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு online payment -ல் உதவிகள் தேவைப்படின் / சிரமங்கள் ஏற்படின் நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

மாற்றுத்திறனுடைய மாணாக்கர்களின் நடப்புத் தாள்களுக்கு மட்டுமே தேர்வுக்கட்டண விலக்குண்டு. கல்லூரிப் படிப்புக் காலத்தை முடித்துவிட்ட நிலுவைத்தாள்களுள்ள மாணவர்களும், 'Redo' செய்யும் மாணவர்களும் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு நேரில் வந்துத் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

9/4/2021

தேர்வு நெறியாளர் முதல்வர்

தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

முதல்வர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.